பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 13 | சனிக்கிழமை | 30.09.2023 | அதிர்வு 60

## மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளது நீதித்துறை

### மாணவர் ஒன்றியம் கண்டனம்

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் ஊடாக மக்களின் நம்பிக்கையை நீதித்துறை இழந்துள்ளது. அத்துடன் இந்த விவகாரம் இனப்படுகொலைக்கான

02

# நீதித்துறை மீதான அச்சுறுத்தலைக் கண்டித்து யாழில் புதனன்று மனிதச் சங்கிலிப் போராட்டம்

### தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுகூடித் தீர்மானம்

– எஸ்.நிதர்ஷன் –

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறிய விவகாரத்தில், தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காண்பிக்கப் போராட்டங்களை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கூடிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட்,

02



## முல்லைத்தீவு நீதிபதி விவகாரம்



# இலங்கைக்கு தலைகுனிவு

### சம்பந்தன் கடும் சீற்றம்

- சீ.ஏ.தமிழ்மாறன் -

"அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பிலும், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் நாட்டை விட்டு வெளியேறியமை குறித்தும் இந்த நாடும் அரசும் வெட்கித் தலைகுனிய வேண்டும்."

02

# சி.ஐ.டியிடம் உடனடி விசாரணையை கோருகின்றது சட்டத்தரணிகள் சங்கம்



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் உடனடியான விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவைக் கோருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா, உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதால் பதவியை இராஜிநாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகப் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

02

## முல்லை. நீதிபதி தானாக வந்து சட்டமா அதிபரைச் சந்தித்தாராம்

### வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் பேசியுள்ளார் என்கிறார் நீதி அமைச்சர்



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தானாக முன்வந்து சட்டமா அதிபரைச் சந்தித்தார் எனத் தெரிவித்துள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, கொழும்பில் அவர் இரண்டு வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளார் எனவும்

02



இது இரகசியம் குறித்துப் பேசும் பத்தி. என்றாலும் முன்னர் நடந்து – வெளியே தெரியாமல் இருக்கும் – விடயங்களை அவ்வப்போது பரிமாறி கொள்வதும் கூட பொருத்தமானதுதான் என்று நினைக்கிறேன்.

இப்போது நீதிபதி ஒருவரை அச்சுறுத்திய விடயம் பெரிய விவகாரமாக பேசப்படுகிறது. நான் இன்று குறிப்பிடும் அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் எல்லா

03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## முல்லை. நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறியுள்ளார்.

பி.பி.சி. சிங்கள சேவையிடமே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வெவ்வேறு வழக்குகளில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அதன் காரணமாக அவர் தானாக முன்வந்து சட்டமா அதிபரை ஆலோசனைக்காகச் சந்தித்தார்.

அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் என்றால் நீதிபதி என்ற வகையில் அவசியமான பிடியாணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு.

நீதிபதி ரி.சரவணராஜாவின் இராஜினாமா குறித்து விசாரணைகளை மேற்கொண்டவேளை அவர் ஒரு வாரத்துக்கு முன்னர் கொழும்புக்கு வந்து தனது காரை விற்றார் எனவும், இரண்டு வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது." – என்றார்.

## நீதித்துறை மீதான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்களும், முக்கியஸ்தர்களும் மேற்படித் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மிகப் பெருமெடுப்பில் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடத்திலிருந்து யாழ். நகர் வரை மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. அந்தப் போராட்டம் காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்படும். இது தொடர்பாக மக்களுக்கு விளக்கம் அளிக்கும் துண்டுப்பிரசுரங்கள் இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

அதன்பின்னர் முல்லைத்தீவை முடக்கிப் போராட்டம் நடத்தவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகளின் கவனத்துக்கு இந்த விவகாரத்தைக் கொண்டு செல்லவும் நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன் (தமிழ் மக்கள் கூட்டணி), எம்.ஏ.சுமந்திரன் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி), த.சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.), எம்.கே.சிவாஜிலிங்கம் (தமிழ்த் தேசியக் கட்சி) ஆகியோரும், சி.வி.கே.சிவஞானம் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி), தியாகராஜா நிரோஷ் (ரெலோ), பா.கஜதீபன் (புளொட்), க.சர்வேஸ்வரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.), எஸ்.கலையமுதன் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சி.ஐ.டியிடம் உடனடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

உண்மையில், அவருக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்பட்டதா, அவ்வாறு காணப்பட்டால் அது யாரால் விடுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய தரப்புகள் யாவை என்பன தொடர்பில் விரிவான விசாரணையை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

நீதித்துறையின் சுயாதீனத்தையும், நன்மதிப்பையும் உறுதிப்படுத்துவதற்காக இந்தச் செயற்பாடு மிகவும் அவசியமாக உள்ளது.

ஆகவே, குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்த விடயத்தில் தாமதமின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எழுத்து மூலமான கோரிக்கையையும் அனுப்பி வைக்கவுள்ளது." – என்றார்.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நீதிபதி ரி.சரவணராஜா மீளவும் பதவியை ஏற்பதற்கும், அவர் சுதந்திரமாகக் கடமையாற்றுவதற்கும் ஏதுவான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் விரைந்து எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"குருந்தூர்மலை சம்பந்தமான முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்தல், அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தல் மற்றும் அழுத்தங்களைப் பிரயோகித்தல் ஆகிய விடயங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவையாகும்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தன் மீது பயன்படுத்தப்பட்ட அழுத்தங்கள் காரணமாகப் பதவியில் இருந்தும் விலகியுள்ளார். அதேவேளை, உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டும் அவர் வெளியேறியுள்ளார். இதனூடாக அவர் சந்தித்த நெருக்கடிகள் எவ்வாறு இருந்தன என்பதை விளங்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் நாடும் அரசும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

நீதிமன்றமும் நீதிபதிகளும் சுதந்திரமாகச் செயற்பட இடமளிக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் மக்கள் நீதிமன்றம் சென்று நீதியைப் பெற முடியும்.

நீதிமன்றத்தினதும் நீதிபதிகளினதும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தினால் அது பாரதூரமான குற்றமாகும்.

இந்த விடயம் சம்பந்தமாக உள்நாட்டு விசாரணை மாத்திரமல்ல வெளிநாட்டு விசாரணையும் நடக்க வேண்டியது அவசியம்.

இலங்கையின் நீதித்துறை சுதந்திரத்தைப் பறிக்கும் இந்தப் பாரதூரமான செயல்களை வெளிநாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் மிகவும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். அத்துடன் நீதிபதி ரி.சரவணராஜா மீளவும் பதவியை ஏற்பதற்கும், அவர் சுதந்திரமாகக் கடமையாற்றுவதற்கும் ஏதுவான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்க வேண்டும்." – என்றார்.

## மக்களின் நம்பிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

சர்வதேச நீதிக்கு மேலும் வலுச்சேர்க்கின்றது."

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா 23.09.2023 அன்று திகதியிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக, உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த அனைத்து நீதிபதிப் பொறுப்புக்களில் இருந்து விலகியுள்ளதோடு, நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்" என்னும் செய்தி நேற்றுமுன்தினம் (28) வெளிவந்து நீதித்துறையின் நம்பகத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளினை ஏற்படுத்தியுள்ளது.

குருந்தூர்மலை வழக்கில் உண்மையை நிலைநாட்டுவதற்காக நடுநிலையுடனும் நீதியுடனும் வழக்கை விசாரித்து வந்த நீதிபதி ரி.சரவணராஜா தனது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாக பதவியிலிருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியமைஎன்பது அப்பட்டமாக இலங்கை நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மீது விழுந்த மற்றுமொரு கரும்புள்ளியாகும்.

குருந்தூர்மலை வழக்கில் தொல்பொருள் பிரதேசத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை கட்டுமானம் தொல்பொருள் பணிப்பாளரால் முன்னெடுக்கப்பட்டுள்ளதென அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தது. அவ்வாறிருக்க இந்தத் தீர்ப்பை மாற்றியெழுத சட்டமா அதிபரால் நீதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது எனும் செய்தி ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாக இருந்தது.

குருந்தூர்மலை வழக்கு மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரங்களில் நீதியை நிலைநாட்ட உறுதித்தன்மையோடிருந்த நீதிபதியை "தமிழ் நீதிபதி"என்று அடையாளமிட்டு நாடாளுமன்றத்தில் விமர்சிக்கும்போதே இலங்கை நீதித்துறையின் சுயாதீனம் விமர்சனத்துக்குள்ளாகி விட்டது. அதேவேளை, நீதிபதிக்குரிய பொலிஸ் பாதுகாப்புகுறைக்கப்பட்டதோடு, அவர்புலனாய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டார் எனும் செய்தியானது அப்பட்டமாக நீதித்துறையின் சுயாதீனத்தைக் கேள்விக்குள்ளாக்கியதோடு, நீதியையும் கேலிக்குரியதொன்றாக்கியுள்ளது.

இலங்கையில் நடந்தேறிய இந்தச் சம்பவங்கள் நீதித்துறைச் சுயாதீனத்தில் ஒரு அங்கமான நீதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் கேள்வியைத் தோற்றுவித்துள்ளதோடு, நீதிமன்றச் செயற்பாடுகளில் அரசியல் மற்றும் புற காரணிகளின் அழுத்தம் தொடர்ந்தும் இருக்கின்றமையையும் உறுதி செய்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தச் சம்பவம் ஒரு விடயத்தை சந்தேகத்துக்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றது. அதாவது தமிழ் மக்கள் மீது நடந்த இனப்படுகொலைக்கான நீதி இலங்கை நீதித்துறையால் சாத்தியப்படாது என்பதுவேயாகும். தமிழ் மக்கள் உள்ளக விசாரணையையும் நீதிப் பொறிமுறையையும் நம்ப முடியாது என்பதை இது உறுதி செய்கின்றது, இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிக்கு இது மேலும் வலுச்சேர்க்கின்றது.

இங்கு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை விட, நீதித்துறைக்குப் பாரிய அநீதி நிகழ்ந்துள்ளது. இவ்வாறான சூழலில்தான் இலங்கை அரசு உலக நம்பிக்கையை வென்றெடுக்கப் போகின்றது. இங்கு தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்குரிய நீதியை – நிவாரணத்தை வழங்கவும், நீதித்துறையில் சுயாதீனத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்யவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்துகின்றது.

இங்கு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை விட, நீதித்துறைக்குப் பாரிய அநீதி நிகழ்ந்துள்ளது. இவ்வாறான சூழலில்தான் இலங்கை அரசு உலக நம்பிக்கையை வென்றெடுக்கப் போகின்றது. இங்கு தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தலுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்குரிய நீதியை – நிவாரணத்தை வழங்கவும் நீதித்துறையில் சுயாதீனத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்யவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்துகின்றது." – என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றங்களும் கூண்டோடு அச்சுறுத் தலை எதிர்கொண்ட காலம். அதிலிருந்து அவை மீண்டமை பற்றிய ஒரு வரலாற்றுச் சுருக்கத்தை நான் இப்போது கூறப் போகி றேன். அது நேரடியாக என்னோடு சம்பந் தப்பட்டது.

இது நடந்தது – 1996 இல் யாழ் குடா நாட்டை இராணுவம் முழுமையாக மீளக் கைப்பற்றிய பின்னர். அப்போது யாழ் நகரில் இருந்து வெளியாகிக் கொண்டிருந்த ஒரே ஒரு பத்திரிகையின் ஆசிரியராக நான் இருந்தேன். பல தரப் புகளையும் ஒரே சமயத்தில் எதிர்கொண் டேன்.

1997 பிற்பகுதியில் களநிலைகள் சடுதியாக மாறின. குடா நாட்டுக்குள் யாழ் நகரப் பகுதிக்கு வெளியிலும் தங்களின் பிடியை படைத்தரப்பு இறுக்க ஆரம்பித் தது. அதுவரை வலிகாமத்தில் ஒளித்துப் பிடித்து விளையாடி, தலைமறைவாக சித்து விளையாட்டுக்களைக் காட்டிக் கொண்டிருந்த புலிகள் வேறு வழி யின்றி, யாழ் குடா நாட்டுக்கான தங்களின் செயற்பாட்டு மையத்தை புங்குடுதீவுக்கு மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டார்கள்.

அச்சமயம் வன்னியில் பலமாக நிலையூன்றி இருந்த புலிகள், அங்கி ருந்தபடியே கடல்வழிப் பயணம் செய்து, புங்குடுதீவுப் பகுதியைத் தமது கட்டுப்பாட் டுக்குள் வைத்துக் கொண்டனர்.

யாழ் நகரில் இருந்து மண்டைதீவு வழியாக வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேசம் வரை அரசு படைகளினதும், அவர்களின் கண்காணிப்பில் இயங்கிய ஈ.பி.டி.பியினதும் நிர்வாகமும் நடந்தது. ஆனால் அதனையும் தாண்டி, வேலணை வங்களாவடிக்கு அப்பால் புங்குடுதீவுப் பிரதேசம் புலிகளின் பிடியில் இருந்தது. அங்கிருந்த பொதுமக்கள் அச்சமயத் தில் பெரும்பாலும் முற்றாக வெளியேறி யிருந்தனர்.

புங்குடுதீவை மையமாக வைத்து யாழ். குடா நாடு மீது கவனம் செலுத்திய புலிகள் அமைப்பின் அப்போதைய யாழ். பொறுப்பாளராக இருந்தவர் தூயவன்.

புங்குடுதீவில் இருந்தபடியே சாவகா சமாக புலிகள் குடாநாட்டு அரச நிர்வாகத் துக்குள் ஊடுருவுகின்றார்கள், மீண்டும் நிதி வசூல் நடவடிக்கைகளை தாராளமாக ஆரம்பித்து விட்டார்கள் என்றெல்லாம் அரசல் புரசலாக செய்திகள் வெளிவரத் தொடங்கின. அங்கிருந்தபடியே யாழ் சிவில் நிர்வாகக் கட்டமைப்பைப் புலிகள் குழப்பினர். அவர்கள் கட்டளைப்படி வாரத் தில் மூன்று நாள்கள் அரச செயலகங் கள், வங்கிகள் மூடப்பட்டன. புலிகளின் கட்டளையால் நீதிமன்றங்களும் செயல் இழந்தன. புங்குடுதீவில் இருந்தபடியே தான் இந்தக் குழப்பங்களைப் புலிகள் முன்னெடுக்கின்றனர் என்பதை உணர்ந்து உஷாராகியது படைத்தரப்பு.

அப்போதுதான் இராணுவத் தரப்பிலி ருந்து ஒரு பத்திரிகை அறிவிப்பு வந்தது. இனிமேல் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அடையாள அட்டையை வைத்தி ருப்பவர்கள் மட்டுமே பண்ணைப் பாலத் தைத் தாண்டி தீவுப் பகுதிக்குச் செல்ல முடியும். ஏனையோர் வடக்குப் படைகளின் கட்டளைத் தளபதியிடம் முன் அனுமதி பெற்றால் மட்டுமே தீவகத்துக்குள் செல்ல முடியும் என்ற அறிவித்தல் அது. அதனை நடைமுறைப்படுத்துவதில் படைத்தரப்பு தீவிரமாக இருந்தது.

இதனால் ஊடகவியலாளரான எனக் கும் புலிகளுடனான நேரடித் தொடர்பாடல் தடைப்பட்டது. அந்த யுத்த சமயத்தில் அப்படி ஊடாட்டமின்றி விலகி நிற்பது விபரீதமான விளைவுகளைக் கொண்டு வரும் என்பதை நான் நன்கு உணர்ந்தி ருந்தேன்.

தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலைமை பாதகமான விளைவுகளை – புரிந்துணர்வு இல்லாத சிக்கல்களை – ஏற்படுத்தும் என நான் அஞ்சினேன். வாரங்கள் கடந்து சில மாதங்களாகப் புலிகள் தரப்பைச் சந்திக்க முடியாத சூழலில், ஏதோ ஒரு செய்தி சம்பந்தமாக புலிகளுக்கு நமது பத்திரிகை மீது முறுகல் ஏற்பட்டிருப்பதாக நான் அறிந்தேன். எப்படியாயினும் புலிக ளின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து, முரண்பாடுகளை களைவது – Damage Clearing செய்வது – அவசரமாக வும் அவசியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டியது என்பது புலனாயிற்று.

வேறு வழியில்லை. சண்டைக்காரன் காலில் நேரில் விழுவதே பொருத்தமானது என முடிவெடுத்தோம்.

அப்போது யாழ் படைகளின் வடக்குத் தளபதியாக இருந்தவர் ஜெனரல் லயனல் பலகல்ல. எதிரும் புதிருமான திசையில் இருந்தாலும், நாங்கள் நல்ல நண்பர்கள். பலாலியில் அவரைச் சந்திக்க நேரம் கேட்டு போய்ச் சந்தித்தேன். மதிய விருந்து டன் சந்திப்பு.

என் பிரச்சினையை அவரிடம் கூறினேன். கூர்ந்து செவிமடுத்தார்.

*“நீங்கள் புலிகளைச் சந்திப்பதற்கா கப் புங்குடுதீவுக்குச் செல்வதற்கு நாம் உத்தியோக ரீதியில் உங்களுக்கு அனுமதி தர முடியாது. ஆனால் உங்கள் பத்திரி கையின் பிரதிநிதி என்ற முறையில் உங்கள் பத்திரிகையின் விநியோக நடவடிக்கைகளை தீவுப் பகுதியில் மேற் பார்வை செய்வதற்காக அனுமதிக்கும்படி விண்ணப்பித்தால் அனுமதி தர முடியும்.”* – என்றார். உடனேயே விண்ணப்பத்தைக் கொடுத்தேன்.

அதைப் பெற்றுக் கொண்ட அவர் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல தம்பக்க விடயங்கள் பலவற்றை என்னிடம் கூறத் தொடங்கினார். அவரின் வார்த்தை களில் அவற்றைத் தருகிறேன்.

*“புலிகள் குடாநாட்டு நிலத்தை முற்றாக இழந்து விட்டார்கள். இனிமேலும் குடா நாட்டு மக்களை அவர்கள் கஷ்டப்படுத்து வது நீதியானதல்ல. இங்குள்ள சிவில் நிர்வாகத்தை அவர்கள் குழப்புவது அவர்களது அரசியலாக இருக்கலாம். அதை விட்டு விடுங்கள். அதை எப்படிச் சமாளிப்பது, முறியடிப்பது என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். அதை நாம் பார்த் துக் கொள்வோம். ஆனால் நீதிமன்றச் செயற்பாட்டை அவர்கள் முடக்குவதுதான் மிகப் பெரிய தப்பு. குடாநாட்டு மக்களுக்கு அவர்கள் செய்யும் மிகப் பெரிய துரோகம். யாழ்.நீதிமன்றங்களுக்கு நீதிபதியாக நிய மிக்கப்பட்ட பலரும் பதவியேற்ற அன்றே புலிகளின் மிரட்டல் கடிதம் கிடைத்ததும் பதவியை விட்டு விட்டு ஓடும் நிலைமை தொடருகின்றது. இது நல்லதற்கு அல்ல. மாதாந்த தாபரிப்புப் பணம் பெறவேண்டிய பல நூற்றுக்கணக்கான பெண்கள் அவற்றைப் பெறமுடியாது அல்லாடுகின் றனர். இங்கு மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுகின்றன என நீங்கள் தான் தினசரி கடுமையாக – எங்களைக் கண்டித்து – எழுதுகின்றீர்கள். மனித உரி மைகளை நிலைநாட்டுவதாயின் முதலில் நீதிமன்றங்கள் இயங்கவேண்டும். இப்போது உதாரணத்திற்கு கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவி பலாத்காரம் செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த விடயத்தை நீங்கள்தான் ஊதிப் பெருப்பித்து, பெரிய அளவில் ஹர்த்தால், கடை யடைப்பு, ஆர்ப்பாட்டங்கள் என்றெல் லாம் விரிவுபடுத்தினீர்கள். நாங்களோ சத்தம் சந்தடியின்றித் துருவி விசாரித்து உண்மையான சந்தேக நபர்களைக் கண்டறிந்து, கைது செய்திருக்கின்றோம். கைது செய்யப்பட்ட இந்தப் படையினர் இப்போது விளக்கமறியலில் உள்ளனர். அந்த வழக்கைக் கூட விசாரிப்பதற்கு யாழ். நீதிமன்றங்கள் கூட முடியாத நிலைமை நீடிக்கின்றது. இப்படி விவகா ரம் நீடித்தால் விசாரணையின்றி நாங்கள் அவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத் திருக்க முடியாது. எனவே வழக்கை அநுராதபுரம் நீதிமன்றத்துக்கோ அல்லது பிற நீதிமன்றங்களுக்கோ மாற்றுவார்கள். அத்தகைய நீதிமன்றங்களுக்கு இங்கு யாழ்ப்பாணத்திலிருந்து சாட்சிகளோ, வழக்காளிகளோ செல்லப் போவதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் என்ன நடக் கும்? வழக்குகள் தள்ளுபடியாகும். அந்தச் சந்தேக நபர்கள் மீண்டும் பணிக்குத் திரும்புவர். செம்மணித் தடைநிலையில் மீண்டும் அவர்கள் பணிக்குத் திரும் பினாலும் கூட ஆச்சரியப்படுவதற் கில்லை. இப்படிப் படையினருக்கு எதி ரான வழக்குகளோ ஒன்று, இரண்டல்ல, பல டசின் கணக்கில் உள்ளன. யாழ். நீதிமன்றங்களை முடக்குவது அந்தப் படையினருக்குத்தான் வாய்ப்பாக மாறும். மனித உரிமைகளைப் பேணி, சட்டம் – ஒழுங்கை நிலை நாட்டவேண்டும் என்று கருதும் எங்களைப் போன்ற நியாயமான அதிகாரிகளுக்குத் தோல்வியே கிட்டும்.”*– என்று நீண்ட விளக்கவுரை ஒன்றை மதிய விருந்துக்கு இடையில் அளித்தார் அவர்.

*“ஆகவே, புங்குடுதீவுக்குச் சென்றால் புலிகளுடன் பேசுங்கள். நீதிமன்றங்களை யாவது இயங்கவிடும்படி வற்புறுத்துங் கள். உங்களின் யாழ். சமூகத்துக்கு நீங்கள் ஏதாவது உருப்படியாகச் செய்யவேண்டும் என்று நினைத்தால் நீதி மன்றங்களைத் திறக்கச் செய்வதுதான் அதுவாக இருக்க முடியும்.”*– என்றும் அவர் கூறினார்.

அவர் கூறிய விடயங்கள் எனது மனதில் தைத்தன. பல புள்ளிவிவரங்களையும் வலுவான ஆதாரங்களையும், விவரமான தகவல்களையும் அவர் என்னிடம் கூறி னார். இது நடந்து கால் நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டமையால் அவற்றை மறந்து விட்டேன்.

ஆனால், அன்றைய சூழலில் அருள் சாகரன், ஏகநாதன் என்ற வரிசையில் பல நீதிபதிகள் பதவிக் கதிரைக்கு வந்தும் நீதிபரிபாலனம் செய்ய முடியாமல் விலகிச் சென்றனர் என்பது எனக்கு இன்னும் நினைவில் நிற்கின்றது. அப்படி நீதித் துறையையே முடக்குகின்ற செயற்பாடு புலிகளின் தந்திரோபாயத்துக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்பது போல எமக்குள் கருதி, அந்தச் செய்திகளுக்கு நாம் விளக்க மில்லாமல் முன்னுரிமை, முக்கியத் துவம் கொடுத்துக் கொண்டிருந்தோம். அது தப்பானது என்பது அன்று ஜெனரல் பலகல்ல அளித்த விளக்கத்திலிருந்து எனக்குப் புரியத் தொடங்கியது. இதற்கு ஏதும் செய்தாகவே வேண்டும் என எனது மனதில்பட்டது. நான் உறுதி எடுத்துக் கொண்டேன்.

அந்த உறுதியில் நான் வென்றேனா? நீதிமன்றங்கள் புலிகளின் தலையீடின்றி இயங்கத் தொடங்கியமை எங்ஙனம்? நாளை தொடர்ந்து விவரமாகப் பார்ப் போமா நண்பர்களே...!



### முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா

# மீளவும் பதவிக்குத் திரும்பக் கூடிய நிலையை இந்த அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும்!

### யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும் தன் பதவிக்குத் திரும்பி, சுயா தீனமான முறையில் தனது கடமைகளைச் செய்யக் கூடிய நிலையை அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் குறித்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி உள்ளடங்கலாக நீதித்துறையிலே தான் வகித்த அனைத்துப் பதவிகளையும் அரசியல் ரீதியான அழுத்தங்களின் காரணமாகவும், உயிர் அச்சுறுத்தலின் காராணமாகவும் இராஜிநாமாச் செய்து விட்டு, இலங்கையிலே வாழ முடியாத நிலையில் நாட்டை விட்டு வெளியேறி இருக்கும் நீதிபதி ரி.சரவணராஜா இன்று எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி ஜனநாயகத்தையும், நீதியையும் மதிக்கும் அனைவருக்கும் அதிர்ச்சி அளிப்பதுடன், இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக வெளிக்காட்டுகின்றது.

நீதிபதி சரவணராஜா குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்தால் சிங்கள பௌத்த தேசியவாத நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட மீறல்களை வெளிப்படையாகக் கண்டனம் செய்து, நியாயமான தீர்ப்புக்களை வழங்கிய ஒரு நீதிபதி ஆவார்.

தமிழ் மக்களின் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு அரசால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் மக்களின் நினைவேந்தல் உரிமையை உறுதிப்படுத்தித் தீர்ப்புக்களை வெளியிட்ட ஒருவர். இவ்வாறான நேர்மையும், துணிச்சலும் மிக்க நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் தென்னிலங்கையில் உள்ள தீவிர சிங்கள தேசியவாத சக்திகள் வெறுப்புப் பிரசாரங்களை அண்மையிலே முன்னெடுத்திருந்தனர்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இந்த நீதிபதியை மிகவும் மோசமான முறையில் விமர்சித்தும் அச்சுறுத்தியும் இருந்தார். நீதிபதி சரவணராஜா தனது இராஜிநாமாக் கடிதத்திலே தனது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்தும், தாம் எதிர்நோக்கிய அழுத்தம் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி நீதிபதி சரவணராஜாவைச் சட்டமா அதிபர் தனது அலுவலகத்துக்கு அழைத்தார் எனவும், அந்தச் சந்திப்பிலே குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலே நீதிபதி சரவணராஜா வழங்கிய தீர்ப்புக்களை மாற்றியமைக்கும்படி நீதிபதியின் மீது ஆலோசனை என்ற வடிவத்திலே அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது எனவும் ஊடகங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

சட்டத்துக்கு அமையத் தன் கடமைகளைச் செய்த ஒரு நீதிபதிக்கே இந்த நிலைமை ஏற்படின், நாளாந்தம் இனவாத செயன்முறைகளை எதிர்கொண்டு போராடும் நாட்டின் சிறுபான்மை சமூகங்களின் நிலைமை என்ன என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது.

நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக இடம்பெற்ற வெறுப்புப் பிரசாரங்கள், அச்சுறுத்தல்கள், அவரது பணியை அவர் சுயாதீனமாகச் செய்வதனைத் தடுக்கும் வகையில் அவரின் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் அனைத்தையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்த முயற்சிகளில் ஈடுபட்ட அனைவரும் நீதிபதி சரவணராஜா இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பிலே பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோருகின்றது.

வடக்கு - கிழக்கின் நீதிக் கட்டமைப்பு இன்று அச்சுறுத்தல்களையும், அழுத்தங்களையும் சந்தித்து வருகின்றது. வடக்கு - கிழக்கில் பணியாற்றும் நீதிபதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு அடிப்படையான காரணமாக அமைவது இலங்கை அரசினது சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலே. தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தைச் சிங்கள - பௌத்தமயமாக்குவதும், தமிழ் மக்களின் நினைவேந்தல் செயன்முறைகளை வலிந்து தடுத்தலும் இந்த நிகழ்ச்சி நிரலின் பகுதிகளாகும்.

இந்த நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போகாத நீதிபதிகளும், ஏனைய அரச ஊழியர்களும் பல்வேறு வழிகளில் அச்சுறுத்தலுக்கும், அழுத்தத்துக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகின்றனர்.

சிங்கள பௌத்த மேலாதிக்கம் ஒழியும் வரை வடக்கு - கிழக்கிலே நீதித்துறையும் சரி ஏனைய நிர்வாகத் துறைகளும் சரி பாதிப்பையே எதிர்கொள்ளும். எனவே, சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை எதிர்த்து, நாட்டின் எல்லா சமூகங்களும் சமத்துவமான முறையிலே வாழ்வதனை உறுதிப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுப்பதற்கான அணிதிரட்டலிலே நாட்டின் எல்லா முற்போக்கு சக்திகளும் இன, மத, பிராந்திய பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்.

நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி ஒன்றிலே அகப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், இனவாதத்தைக் கையில் எடுக்கும் அரசியல் சக்திகள் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இருந்து அவர்களைத் திசைதிருப்பிவிட முயற்சி செய்கின்றனர். நீதிபதி சரவணராஜா போன்றோர் இலக்கு வைக்கப்படுவது இந்த இனவாத முயற்சியின் வடிவமே.

அரசினதும், சிங்கள மேலாதிக்க சக்திகளினதும் இந்தத் தந்திரோபாயத்தை விளங்கிக் கொண்டு இனவாதத் தரப்புக்களையும், மக்களின் நலனிலே அக்கறை அற்ற இந்த அரசையும் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும் தன் பதவிக்குத் திரும்பி, சுயாதீனமான முறையில் தனது கடமைகளைச் செய்யக் கூடிய நிலையினை அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும் நீதித் துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும் வடக்கு - கிழக்கில் நீதிபதிகள் மீதான அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அடிநாதமாக இருக்கும் அரசினதும், சிங்கள பௌத்த மேலாண்மைவாத சக்திகளினதும் இனவாதம் முறியடிக்கப்பட வேண்டும் இந்த நோக்கங்களுக்காக நாட்டு மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டியது அவசியம்." - என்றுள்ளது.

# நீதி அமைச்சர், சட்டமா அதிபர் உடன் பதவி விலக வேண்டும்

## செல்வம் எம்.பி. வலியுறுத்து



(மன்னார் நிருபர்)

"தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பைச் சொல்லுகின்ற நிலையில் இருக்கக்கூடாது, அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்ற அல்லது வேறு யாரும் சொல்கின்ற தீர்ப்பைத்தான் வாசிக்க வேண்டும் என்ற நிலை இப்போது வெளிப்படையாகத் தெரிகின்றது."

– இவ்வாறு ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உண்மையிலேயே இந்த நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையில் இருக்கின்றதா என்ற கேள்வி எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

அவரின் கருத்துக்களைப் பார்க்கின்றபோது சட்டமா அதிபர் கூட இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்ற செய்தி அறியக்கூடியதாக உள்ளது. நீதித்துறை எங்கே செல்கின்றது?

பதவி விலகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தமிழ்ப் பிரதேசத்தில் இருந்தவர். நியாயமான தீர்ப்பை அவர் வழங்கியதால் தென்னிலங்கையிலே அவர் ஓர் இனவாதியாகவும், ஒரு தமிழராகவும் பார்க்கப்பட்டது. இதன் காரணமாகவே அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நீதித்துறை என்பது நியாயமான வகையில் செயற்பட வேண்டும் என்பது தான் எங்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. மக்கள் நீதித்துறையை நம்பித்தான் இன்றைக்கு நீதிமன்றத்துக்குச் செல்கின்றார்கள்.

ஆனால், இப்போது இருக்கின்ற நிலையைப் பார்க்கும்போது தமிழ் நீதிபதிகள் நியாயமாகச் செயற்படுகின்ற வாய்ப்பைத் தடுக்கின்ற – அவர்களை அச்சுறுத்துகின்ற செயற்பாடுகள் அரங்கேறுகின்றன. முல்லைத்தீவு நீதிபதியின் இராஜிநாமா செய்தி இதனை உணர்த்துகின்றது.

ஆகவே, தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பைச் சொல்கின்ற நிலையில் இருக்கக் கூடாது, அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்ற அல்லது வேறு யாரும் சொல்கின்ற தீர்ப்பைத்தான் வாசிக்க வேண்டும் என்ற நிலை இப்போது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆகவே, நீதித்துறைக்கு விட்ட சவாலாக இது அமைந்துள்ளது.

நீதி அமைச்சர் இந்த விடயத்தை ஆராய வேண்டும். முல்லைத்தீவு நீதிபதியின் இராஜிநாமாவில் அழுத்தம், உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் இராஜிநாமா செய்ய வேண்டும்.

ஏனென்றால் அவர் அமைச்சராக இருக்கும்போது நீதிக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இந்தச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதை நாடாளுமன்றத்தில் ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொள்ள இருக்கின்றோம்.

எதிர்க்கட்சியில் இருக்கும் தமிழ் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இதில் உள்ளடக்கி என்ன செய்யலாம் என்று நாங்கள் ஆராய்ந்து நிச்சயமாக நீதித்துறைக்கு விடுக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சவாலை முறியடிக்க வேண்டும்.

ஏனென்றால் நீதி நடுநிலையானது. அது யாருக்கும் தலைசாய்வதில்லை. அந்தவகையில் எங்களுடைய நீதிபதி சரியான தீர்ப்பை வழங்கியுள்ளார்.

அவரின் குருந்தூர்மலை தீர்ப்பு அவருக்குப் பல அழுத்தங்களையும், அச்சுறுத்தல்களையும் கொடுத்துள்ளது. இதில் புத்த பிக்குகளின் கூட்டமும் அடங்குகின்றது என எண்ணுகின்றேன். இந்த நாட்டை ஆட்சி செய்பவர்கள் புத்த பிக்குகளா? என்ற சந்தேகம் எழுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் அனைத்து நீதிபதிகளையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு எங்களுக்கும், எங்களுடைய மக்களுக்கும் இருக்கின்றது.

ஆகவே, தீர்ப்பு நியாயமாக வழங்கப்பட வேண்டுமென்றால் நீதித்துறைக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தியுள்ளவர்கள் தமது பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும்.

சட்டமா அதிபரின் அழுத்தம் உள்ளது என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார். எனவே, அவரும் இராஜிநாமா செய்வது சிறந்தது எனக் கருதுகின்றேன். நாங்கள் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதன் ஊடாகவே நீதித்துறையை நடுநிலைமைக்குக் கொண்டு வர முடியும்.

முல்லைத்தீவு நீதிபதி தனது பதவியை இராஜிநாமா செய்கின்ற அளவுக்கு மிக மோசமான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய நீதி அமைச்சரும், சட்டமா அதிபரும் இராஜிநாமா செய்ய வேண்டும்." – என்றார்.

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக ஜஸ்வர் உமர் மீண்டும் தெரிவு



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரான ஜஸ்வர் உமர் மீண்டும் சம்மேளனத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உத்தியோகஸ்தர் தெரிவு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

எதிர்வரும் நான்கு வருடங்களுக்கு பணியாற்ற அதிகாரிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் நேற்று இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனங்களை சேர்ந்த அதிகாரிகளின் கண்காணிப்பில் இந்தத் தேர்தல் நடைபெற்றது.

முன்னாள் தலைவரான ஜஸ்வர் உமரும் அனுராதபுரம் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் தக்சின சுமதிபாலவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

இலங்கை உதைபந்தாட்ட நடுவர்கள் சங்கத்தின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் 54 வாக்குகளை பெற்றார். தக்சின சுமதிபாலவுக்கு 20 வாக்குகள் மாத்திரமே அளிக்கப்பட்டன.

இதேவேளை, நீர்கொழும்பு உதைபந்தாட்ட லீக்கின் ரஞ்சித் ரொட்ரிகோ , களுத்துறை உதைபந்தாட்ட லீக்கின் டொக்டர் மினில் பெர்னாண்டோ, காலி உதைபந்தாட்ட லீக்கின் எஸ்.டி.நாகாவத்த மற்றும் இலங்கை கடற்படை உதைபந்தாட்ட லீக்கின் கே.எம்.எம்.பீ.கருணா திலக்க ஆகியோர் உப தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

# கஜேந்திரகுமார் தரப்பு பின்லாந்துச் சந்திப்பில்





தமிழீழம் அனைத்துலக இராஜதந்திரக்கட்டமைப்பின் (International Diplomatic Council of Tamileelam) ஒழுங்கமைப்பில் நேற்று பின்லாந்தில், இருவேறு முக்கிய சந்திப்புகள் நடைபெற்றுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும், பின்லாந்து நாடாளுமன்றத்தின் வெளியுறவுக் குழுவின் தலைவர் கிம்மோ கில்ஜ/னென் மற்றும் எம்.பி.க்கள் ஜ/ஸ்ஸி சரமோ மற்றும் வெய்ஜோ நிமி ஆகியோருக்குமிடையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மற்றுமொரு சந்திப்பு , பின்லாந்து நாடாளுமன்றத்தின் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களை கண்காணிக்கும், வலையமைப்பின் பிரதித் தலைவர் எம்.பி வெரோனிகா ஹொன்கசலோவுடன் நடைபெற்றது.

இச்சந்திப்புகளின் போது ஜனூஊவுநு பிரதிநிதிகளும், கஜேந்திரகுமாரும் தமிழர் தாயகத்தின் இன்றைய நிலையை தெளிவாக விளக்கினார்கள்.

சிறிலங்கா அரசபடைகளினால் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சட்டவிரோத கைதுகள், காணி அபகரிப்புடன் கூடிய பௌத்த மயமாக்கல், உயிர் அச்சுறுத்தல், இனஅழிப்பிற்கான நீதி கோருதலில் அனைத்துலக கவனம் போன்ற பலவிடயங்கள் தெளிவாக புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டது.

பின்லாந்து அரச பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில், இவ்விடயம் தொடர்பாக தங்களுடைய வரையறைக்குட்பட்டு தங்களால் ஆற்றக் கூடிய பங்களிப்பை தாங்கள் செய்வோம் என கூறினார்கள். – என்று இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஊழலில் ஈடுபடும் அரச அதிகாரிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது

கணக்காய்வு சட்டத்தின் புதிய விதிகளின் படி, ஊழல் மோசடியில் ஈடுபட்ட அரச அதிகாரிகளிடம் இருந்து கூடுதலான கட்டணத்தை வசூலிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தேசிய கணக்காய்வாளர் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகள் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்துதல், தற்போதுள்ள சட்டத்தை மீறி அதனை செய்தல் ஆகிய இரு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய குற்றவாளிகளிடமிருந்து அத்தகைய கட்டணம் அறவிடப்படவுள்ளது என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அது தொடர்பாக தலைமைக் கணக்கு அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கும் திறன் கணக்காய்வு ஆணையகத்திற்கு உள்ளது.

அதன்படி, கூடுதல் கட்டணத்தை வசூலிக்க வேண்டிய பல அரச அதிகாரிகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்

இருப்பினும், கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டதை எதிர்த்து அவர்களால் மேன்முறையீடு செய்ய முடியும். அதற்கு மேல்முறையீட்டுக்குழுவைஅமைக்கவேண்டும். எனினும், அந்த குழுவிற்கான உறுப்பினர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை.

இதனால் குழு அமைக்கப்படும் வரை கூடுதல் கட்டண உத்தரகளை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என தேசிய கணக்காய்வு ஆணையகம் தெரிவித்துள்ளது.

# யாழில் ஒன்றாகச் சந்தித்த தமிழ்க் கட்சிகள்







தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகளின் அவசர சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி. விக்னேஸ்வரன் (தமிழ் மக்கள் கூட்டணி), எம்.ஏ.சுமந்திரன் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி), த.சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.), எம்.கே.சிவாஜிலிங்கம் (தமிழ்த் தேசியக் கட்சி) ஆகியோரும், சி.வி.கே.சிவஞானம் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி), தியாகராஜா நிரோஷ் (ரெலோ), பா.கஜதீபன் (புளொட்), க.சர்வேஸ்வரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.), எஸ்.கலையமுதன் (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:– எஸ்.நிதர்ஷன்)





# முத்தரிப்புத்துறை ஆற்றுவாயிலில் உருக்குலைந்த நிலையில் சடலம்

(மன்னார் நிருபர்)

மன்னார் சிலாவத்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முத்தரிப்புத்துறை கடற்கரை ஓடைப் பகுதியில் (ஆற்றுவாய்) உயிரிழந்து பல நாள்களாகிச் சிதைவடைந்து எலும்புகள் தெரியும் நிலையில் சடலம் ஒன்று முத்தரிப்புத்துறை மீனவர்களால் நேற்று வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடலுக்குள் வலை பாய்ச்சுவதற்காக சென்ற மீனவர்கள் அந்த உடலைக் கண்டனர்.

கண்டுபிடிக்கப்பட்ட சடலம் தொடர்பாக சிலாவத்துறை பொலிஸாருக்கு மீனவர்களால் தகவல் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



# சுற்றுலா செல்பவர்களுக்கு பொலிஸ் முன்னெச்சரிக்கை

நீண்ட வார இறுதி விடுமுறையில் நாட்டின் பல்வேறு இடங்களுக்குச் சுற்றுலா செல்பவர்கள், தமது பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் அறிவுறுத்தியுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வாகனங்களைச் செலுத்தும்போது உரிய போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுமாறும் அவர் கோரியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவுகின்றது.

எனவே, வாகனங்களை அதிக வேகத்தில் செலுத்துவது, போக்குவரத்து விதிமுறைகளை மீறுவது, மது போதையில் வாகனத்தைச் செலுத்துவது உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமக்களின் நன்மை கருதி நாடளாவிய ரீதியில் போக்குவரத்துப் பிரிவிலுள்ள பொலிஸார் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

# நாமல்வத்தை கிராமத்துக்குள் புகுந்து யானை அட்டகாசம்!

## இரண்டு நாள்களில் எட்டு வீடுகள் சேதம்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – நாமல்வத்தை கிராமத்துக்குள் புகுந்து யானை அட்டகாசம் செய்ததால் எட்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக அப்பகுதியில் உள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாமல்வத்தை கிராம மக்கள் வீட்டுத் தோட்டம், விவசாயம் போன்றவற்றை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தை சுற்றி யானை மின் வேலிகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் யானைகள் மாலை 6.00 மணிக்கே கிராமத்துக்குள் உட்புகுந்து வீட்டுத் தோட்டங்கள்,தென்னை மரங்கள்,வாழை மரங்கள் போன்றவற்றை சேதப்படுத்தி வருகின்றன என அந்த மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

யானையை விரட்டுவதற்கு முற்படுகின்ற போது வெளிச்சத்தை நோக்கி யானை துரத்தி வந்து வீடுகளை உடைத்து சேதப்படுத்தி வருவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இந்தக் கிராமத்துக்குள் புகுந்த யானை இரண்டு நாள்களில் எட்டு வீடுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளதாகவும், நெல் தானியங்களை உட்கொண்டு சென்றுள்ளதாகவும் அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிராமத்தை சுற்றி போடப்பட்டிருக்கின்ற யானை மின் வேலிகள் சீரான முறையில் கவனிக்கப்படாமல், மின் இணைப்பு இன்றி இருப்பதனாலயே யானைகள் கிராமத்துக்குள் உட்புகுந்து அட்டகாசம் செய்கின்றன எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

யானை அட்டகாசம் செய்யும் போது வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தாலும் கூட உரிய நேரத்தில் அவர்கள் வருகை தருவதில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆகவே யானையின் அட்டகாசத்தை குறைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நாமல்வத்தை கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சீனா விரிக்கும் வலை

இலங்கைக்கு உடனடி அயல் தேசம் இந்தியாதான். ஆனால் அதிலும் கூட தொலைவிலுள்ள சீனாவுடன்தான் கொழும்புக்குப் பற்றுப் பாசம் அதிகம்.

வல்லாதிக்க நாடான சீனாவும், வல்லாதிக்க நாடாக வளர்ந்து வரும் இந்தியாவும் தங்களுக்குள் நடத்தும் வலுச் சமநிலை பற்றிய இழுபறியில் இடையில் சிக்கித் தள்ளாடுகின்றது இலங்கை என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

இந்திய - சீன நெருக்கடியைத் தீர்மானிக்கும் பிராந்தியத்தில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில், இலங்கை நிலை கொண்டுள்ளமை இதற்கு முக்கிய காரணம்.

இந்தியாவை 'செக்' வைத்துக் கட்டுப்படுத்தும் தனது நகர்வுகளுக்கு இலங்கையைத் தனது கைப்பொம்மையாக மாற்றுவது முக்கியமானது என்று கருதும் சீனா, அதற்காக இலக்குகளை கண் வைத்துக் காய்களை நகர்த்துகின்றது.

வழமையாகவே பொறி வைத்து மடக்குவதில் கைதேர்ந்தது சீனா என்ற பெயர் உண்டு. இலங்கைக்கு தாராளமாகக் கடன்களை வாரிக் கொட்டியே பொறி வைத்து மாட்டியது சீனா. இலங்கை தனது தென் முனைத் துறைமுகமான ஹம்பாந்தோட்டையை 99 வருட குத்தகைக்கு சீனாவிடம் கையளித்தது என்றால் அது இலங்கைக்குக் கடன் கொடுத்து அதன் மூலம் மடக்கிய சீனப் பொறியின் பெறுபேறுதான்.

அந்த வகையில் மற்றொரு பொறி குறித்தும் இப்போது தகவல் வெளியாகி இருக்கின்றது. அது - இலங்கையின் அரசியலையும் அதிகாரத்தையும் தீர்மானிக்கும் சக்திகளை வளைத்துப் போட்டு, மகிழ்வித்து தனது கைக்குள் மடக்கிக் கொள்ளும் பொறித் தந்திரம்தான்.

சீனாவில் ஒரே கட்சி ஆட்சி முறைதான். ஆட்சியை நடத்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் சர்வதேச ஈடுபாடு என்ற பெயரில் உலக நாடுகளின் பிரதிநிதிகளுக்கு சீனாவில் உல்லாச சுற்றுப் பயணங்களை சீனா ஒழுங்குப்படுத்திக் கொடுப்பது வழமை.

அந்த வகையில் முன்னைய நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களுக்கும் இத்தகைய வாய்ப்புக் கொடுக்கப்பட்டதாம்.

அணி அணியாகப் பிரமுகர்களைக் கூட்டிச் சென்று சீன விருந்தோம்பலிலும் உல்லாசத்திலும் திளைக்க செய்து, வளைத்து போடுவதுதான் திட்டம்.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த உல்லாச பயணத் திட்டம் கட்டங்கட்டமாக வழங்கப்படுகிறது. இப்போதும் கூட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று சீனாவில் உல்லாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. கொவிட் தொற்று வந்திருக்காவிட்டால் பெரும்பாலான எம்.பிக்கள் அனைவரும் தங்களது ஒரு தொகுதி - ஒரு சுற்று - சீன உல்லாசப் பயணத்தை இப்போது முடித்திருப்பர்.

எம்.பிக்களைத் தொடர்ந்து, எம்.பிக்கள் அல்லாத அரசியல்வாதிகளையும் இந்த உல்லாசத் திட்டத்தில் சேர்க்கும் அடுத்த கட்டம் இப்போது ஆரம்பமாகின்றதாம்...!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னெடுக்கும் உதவுநிதித் திட்டங்களுக்கு சீனத் தூதரகம் நேரடியாக நிதி அன்பளிப்புச் செய்யும் அளவுக்கு ஈடுபாடுகள் உள்ளன.

கொழும்பு அதிகார வர்க்கத்தை வளைத்துப் போடும் சீனாவின் தந்திரம் - பொறி - அந்நாட்டுக்குப் பல வகைகளிலும் கை கொடுக்கின்றது என்பது மறுக்கக் கூடியதல்ல.

## யாழில் காணாமல்போன வயோதிபர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணத்தில் காணாமல்போன வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடுவில் பகுதியிலுள்ள காணியொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடுவில், மல்வம் பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் செல்வராசா (வயது 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி வீட்டிலிருந்து இந்த வயோதிபர் வெளியே சென்ற நிலையில், காணாமல்போனார் என்று அவரது உறவினர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அந்த வயோதிபர் சடலமாக நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கக் கோரிக்கை!

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க மீண்டும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போனமையினால், மின்சார உற்பத்திக்கு கூடுதல் செலவு ஏற்பட்டதாக அதன் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் 4500 கிகாவாட் நீர் மின் திறன் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், 3750 கிகாவாட் நீர் மின் திறனையே இவ்வாண்டு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதற்கமைய, அனல் மின் நிலையங்களில் இருந்து 750 கிகாவாட் நீர் மின் திறனை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. அதற்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளது. தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் கூடுதல் தொகையை ஈடு செய்யும் வகையில், இந்தக் கோரிக்கை நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விரிவான தகவல்கள் எதிர்வரும் திங்கட்கிழமை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் இந்தக் கோரிக்கை தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுளா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## இரும்பைக் களவாடிய மூன்று பேர் சிக்கினர்!

பண்டாரவளை பகுதியில் ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான ஒரு தொகை இரும்பைக் களவாடிய குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரும்பைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று தியத்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் தியத்தலாவை,வெலிமடை மற்றும் பண்டாரவளை பகுதிகளைச் சேர்ந்த 22 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

# யாழில் கரு ஜயசூரிய




– எஸ்.நிதர்ஷன்–

முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன் போது பல்வேறு நிகழ்வுகளில் அவர் கலந்து கொண்டமையுடன் ஆலய பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டார். மதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து யாழ் நாக விகாரைக்குச் சென்று விகாராதிபதியுடனும் கலந்துரையாடல் நடத்தினார்.

# ஆறுகளின் நீர் மட்டம் சடுதியாக உயர்வு 7 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை

மழையுடனான வானிலையால் நில்வள, கிங் மற்றும் களு கங்கைகளின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்து வருகிறது என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை 8.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில், குக்குலே கங்க பகுதியில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அங்கு 120 மில்லி மீட்டர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடும் மழை காரணமாக களுத்துறை, இரத்தினபுரி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மாத்திரம் 23 ஆயிரத்து 53 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிலவும் கடும் மழையுடனான வானிலையால், 07 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கண்டி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு 2 ஆம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், பாதுக்க – லியன்வல பிரதேசத்தில் நீரில் மூழ்கி 21 வயதான ஒருவர் காணாமற்போயுள்ளர்.

பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து காணாமற்போன இளைஞரைத் தேடும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

# ஸ்ரீலங்கன் விமான சேவைகள் ரத்து; ஆராய்வதற்கு விரைவில் நடவடிக்கை

ஸ்ரீலங்கன் விமான சேவையின் பயணங்கள் ரத்துச் செய்யப்படுகின்றமை, தாமதமாகின்றமை தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை கலந்துரையாடப்படவுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிலைய தொழிற்சங்க உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர் என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக ஸ்ரீலங்கன் வி–மான சேவைக்கு சொந்தமான விமானங்களின் பல விமானப் பயணங்கள் தாமதமடைந்திருந்தன. சில விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரண்டு விமான பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பல விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன என்று ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் சாதாரணமானவை என விமான சேவை நிறுவனம் கூறியுள்ளது.

விமானப் பராமரிப்பு ஒரு நுணுக்கமான செயற்பாடு எனவும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்தம் தெரிவிக்கிறோம் எனவும் இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் கூறியுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் உரிமம் பெற்ற விமானப் பொறியியலாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு விமானத்தின் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களை உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்களே சரிபார்க்கின்றனர்.

விமானமொன்று வானில் பறப்பதற்கு உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்களின் சான்றிதழ் அத்தியாவசியமாகும்.

அத்துடன், உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்கள் விமானத்திற்கான தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதோடு, அவற்றின் தரத்தையும் பராமரிக்கின்றனர்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் 160 உரிமம் பெற்ற விமானப் பொறியியலாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

நாட்டின் பொருளாதார நிலைமைக்கு மத்தியில், அதில் உரிமம் பெற்ற 35 விமானப் பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

மேலும் உரிமம் பெற்ற 25 விமானப் பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் எதிர்பார்ப்பில் உள்ளனர் எனப் பெயர் குறிப்பிட விரும்பாத உரிமம் பெற்ற விமானப் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டவர் கைது

வெளிநாட்டுவேலைவாய்ப்பைபெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நுவரெலியா பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஒரு லட்சத்து 37 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார் எனக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில் சந்தேக நபர் கடுகன்னாவை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி, மீரந்தெனிய பகுதியை சேர்ந்த 51 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபருக்கு எதிராக மத்துகம, மஹர, பன்னல, கோட்டை, கேகாலை, தம்புள்ளை, நுவரெலியா, காலி, பலப்பிட்டிய, அனுராதபுரம், நுகேகொட, களுத்துறை, புதுக்கடை ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# இலட்சக்கணக்கில் பக்தர்கள் திரண்டு நிற்க வங்கக்கடலில் தீர்த்தமாடிய வல்லிபுரத்தான்






வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி, ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது இலட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு வல்லிபுரத்தாழ்வாரின் அருளைப் பெற்றனர்.






# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிவு: அடுத்த கட்டம் குறித்து ஆலோசனை



அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி முறிவு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து மாநில நிர்வாகிகளுடன் எதிர்வரும் 3 ஆம் திகதி அண்ணாமலை ஆலோசனையில் ஈடுபட உள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அண்ணா பற்றி சமீபத்தில் அண்ணாமலை பேசியிருந்தது பெரும் சர்ச்சையை கிளப்பியது.

அண்ணாமலைக்கு எதிராக அ.தி.மு.க. நிர்வாகிகள் கண்டனம் தெரிவித்தனர். தொடர்ந்து, டில்லியில் அமித்ஷாவை, பழனிசாமி சந்தித்தார். அப்போது, அ.தி.மு.கவினரை அண்ணாமலை விமர்சித்தமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பழனிசாமி பேசினார்.

இதையடுத்து, சென்னையில், கடந்த 25 ஆம் திகதி அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மாவட்ட செயலாளர்களுடன் பழனிசாமி திடீர் ஆலோசனையில் ஈடுபட்டார்.

அதில், பா.ஜ.கவுடன் இனிமேல் கூட்டணி கிடையாது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அ.தி.மு.க. சார்பில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இத்தகைய சூழலில், பா.ஜ.கவன் முன்னாள் மேலிட பொறுப்பாளர் சி.டி. ரவி தனது சமூக வலைத்தள பக்கத்தில்,'புனித திருவள்ளுவர் மண்ணில் தாமரை மலரும்' என நேற்று பதிவிட்டுள்ளார்.

மேலும், திராவிட கட்சிகளுடன் கூட்டணி இன்றி, இனி வரும் தேர்தல்களை பா.ஜ.க. தனித்து எதிர்கொள்ளும் என பா.ஜ.க. வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், 'என் மண் என்மக்கள்' பாத யாத்திரையில் இருக்கும் அண்ணாமலை, பாதயாத்திரையை இடையில் நிறுத்திவிட்டு, ஒக்டோபர் 3 ஆம் திகதி சென்னை பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் மாநில நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட உள்ளார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பா.ஜ.க. – அ.தி.முககூட்டணி முறிவால், அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை, அ.தி.மு.க. ஆதரவு இல்லாமல் நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்வது, ஏனைய கட்சிகளுடனான கூட்டணி நிலவரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆலோசிக்கப்பட உள்ளன என்று பா.ஜ.க. வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் முக்கிய அறிவிப்பை அண்ணாமலை வெளியிட இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

# தமிழகத்தில் திடீரென பரவும் காய்ச்சலால் பலர் பாதிப்பு!

தமிழகத்தில் சமீபகாலமாக காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரசு மருத்துவமனை மட்டுமின்றி, தனியார் மருத்துவமனைகளிலும் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வருவோர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந் துள்ளது.

குறிப்பாக, வெளி நோயாளிகளின் எண்ணிக்கை 20 முதல் 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் தினசரி அனுமதிக்கப்படும் 70 குழந்தைகளில் 20 இற்கும் மேற்பட்டோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



சென்னை, செங்கல்பட்டு, ஈரோடு, தென்காசி, காஞ்சிபுரம், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்துள்ளது. மேலும், டெங்கு பாதிப்பும் அதிகரித்துள்ளது. டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை, ஒரு வாரத்தில் 285 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# நட்சத்திரங்களை ஆய்வு செய்ய இஸ்ரோ திட்டம்

நிலவை தொடர்ந்து நட்சத்திரங்களை ஆய்வு செய்வதற்கு இஸ்ரோ தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் இதற்கான செயற்கைக்கோளை அனுப்புவதற்கு இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

சந்திரயான் 3 வெற்றிக்கு பின்னர், சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள வெளி மண்டலத்தையும் கிரகங்களையும் இஸ்ரோ தற்போது ஆய்வு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் குண்டு தாக்குதல்: 57 பேர் உயிரிழப்பு, பலர் காயம்






பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டு தாக்குதலில் 52 பேர் பலியாகியுள்ளனர்.

மசூதி அருகே நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

பலூசிஸ்தானில் மஸ்துங் மாவட்டத்தில் உள்ள மதினா மசூதி அருகே குண்டுவெடிப்பு நடந்துள்ளது.

இதன்போது, மஸ்துங் மாவட்ட பொலிஸ் துணை கண்காணிப்பாளர் நவாஸ் கஷ்கோரியும் உயிரிழந்துள்ளார்.

மிலாதுன் நபியை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழுகைக்காக ஏராளமானோர் திரண்டிருந்தனர். இந்த நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டதால், உயிரிழப்புகளும் பாதிப்புகளும் அதிகமாகியுள்ளன.

இந்த தாக்குதல் நடைபெற்று சில மணித்தியாலங்களில் குஹ்யபேர் பஃதுங்கவாபகுதியின் கங்கு நகரில் உள்ள மசூதியில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஐவர் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதல்களுக்கு இதுவரை எந்த குழுவினரும் பொறுப்பேற்கவில்லை.

கடந்த 15 நாட்களில் மஸ்துங் மாவட்டத்தில் மாத்திரம் இரண்டு தற்கொலைக் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மாத தொடக்கத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

# அமெரிக்காவுடன் மோதலுக்கு தயாராகிறது வடகொரியா!

உலகம் புதியதொரு பனிப்போரில் நுழைகிறது, இதில் அமெரிக்காவை எதிர்கொள்ளும் கூட்டணியில் வடகொரியா முக்கிய பங்கை வகிக்க வேண்டும், எனவே அணு ஆயுத உற்பத்தியை அதிகரிப்பது காலத்தின் கட்டாயம் என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரிய நாடாளுமன்றத்தில் வைத்து அவர் இதனை தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் தொடர் ஏவுகணை சோதனைகளால் கொரிய தீபகற்ப பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது. தென்கொரியா மற்றும் ஜப்பான் கடற்பகுதியில் கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 100 இற்கும் மேற்பட்ட ஏவுகணை சோதனைகளை நடத்தி உள்ளது.



இந்த நிலையில், தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் கருதுகின்றமையால் அந்த இரு நாடுகளும் அமெரிக்காவுடன் இணைந்து போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் அந்த போர்ப்பயிற்சியானது அந்த நாடுகளிடையே ராணுவ ஒத்துழைப்பை விரிவுபடுத்தி வருகிறது.

எனவே இதனை நேட்டோவின் ஆசிய பதிப்பை இவர்கள் உருவாக்கி வருகின்றனர் என வடகொரியா தலைவர் கிம் ஜோங் உன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், தங்களுக்கு எதிராக வளர்ந்து வரும் இந்த அச்சுறுத்தலை கைவிட வேண்டும் என கிம் ஜோங் உன் கூறினார், இருப்பினும் இந்த போர்ப்பயிற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இது தொடர்பில் வடகொரிய ஜனாதிபதி கூறுகையில், உலகம் புதியதொரு பனிப்போரில் நுழைகிறது, இதில் அமெரிக்காவை எதிர்கொள்ளும் கூட்டணியில் வடகொரியா முக்கிய பங்கை வகிக்க வேண்டும், எனவே அணு ஆயுத உற்பத்தியை அதிகரிப்பது காலத்தின் கட்டாயம் என்று தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகலில் இலங்கை அரசின் கோரமுகம் அம்பலம்

## கண்டன அறிக்கையில் ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகலில் இலங்கை அரசின் கோரமுகம் வெளிப்படுகின்றது என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர் மலையில் கட்டப்பட்ட சட்டவிரோத பௌத்த விகாரை வழக்கின் கட்டளைகளைத் தொடர்ந்து கிடைக்கப் பெற்ற நெருக்கடிகள், உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாகத் தனது பொறுப்புக்கள், பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் ரவிகரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

“நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலில் இலங்கை அரசின் கோர முகம் வெளிப்படுகின்றது. நீதிபதிக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண தமிழ் மக்கள் எவ்வளவு கொடூரமான அரசின் கீழ் கொடூரமான அரசை நடத்திக்கொண்டிருக்கும் இனவாதிகளின் கீழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்த விடயத்திலே நீதியின் பால் அவருக்குக் கொடுக்கப்பட்ட மன அழுத்தங்கள், உயிர் அச்சுறுத்தல்கள் ஊடகங்கள் மூலம் வெளிவந்திருக்கின்றது. இப்படியான நடவடிக்கைளை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களுக்கு இப்படியான நெருக்கடிகள் இலங்கையிலே ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து மக்களுக்கான தீர்வுத் திட்டங்களையோ அல்லது மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிலைமையையோ ஏற்படுத்தித் தரவேண்டும்.” – என்றுள்ளது.

# நீதித்துறை மீதான தமிழர்களின் நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் சுட்டிக்காட்டு

“முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ள செய்தி இலங்கையின் நீதித்துறைக்குக் கழுவ முடியாத கறையாகப் படிந்துள்ளது. நீதித்துறை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான தீர்ப்பை அடுத்து உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகத் தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரசதரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன எனவும், அண்மையில் தனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டது எனவும் தெரிவித்தே நீதிபதி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்த நிலைமை இலங்கை நீதித்துறைக்கு மிகப் பெரும் அவமானம் என்பதோடு, தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறை மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும் சம்பவமாகவும் காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான நிலைமைகள் இனியும் நாட்டில் இடம்பெறாத வகையில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும். நீதித்துறை பணியாளர்களின் சுதந்திரமான பணிகளுக்கும் அச்சுறுத்தல் இல்லாத சூழல் உருவாக்கப்பட வேண்டும். தவறின் நாடு மேலும் மேலும் நெருக்கடியான நிலைமைக்குள் தள்ளப்படுவதோடு, எக்காலத்திலும் நிலையான சமாதானமும், இனங்களுக்களுக்கிடையே நல்லிணக்கமும் ஏற்படாது போய்விடும்.” – என்றார்.

# பேரினவாதத்துக்கு வளைந்து கொடுக்க மறுத்தமையால் நீதிபதிக்கு இந்தக் கதி!

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா விசனம்



பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அனுசரணையாக, நீதிபதி சரவணராஜா வளைந்து கொடுக்க மறுத்திருந்த காரணத்தி னால் தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது.

– இவ்வாறு தமிழத் தேசியக் கட்சி யின் தலைவர் ந. சிறிகாந்தா அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

குருந்தூர் மலை ஆலய விவகாரம் தொடர்பான வழக்கைக் கையாண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, தனது பதவியை ராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியமைக்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது என்பதை தயக்கம் எதுவும் இன்றி கூறிவைக்க விரும்புகின்றோம்.

நாடாளுமன்றத்துக்கு உள்ளே எழுப்பப்பட்ட இனவெறிக் கூச்சல்க ளுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதி பதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்கு தள்ளியிருக்கின்றன என்பது தெட்டத் தெளிவானது.

பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அனுசரணையாக, நீதிபதி சரவணராஜா வளைந்து கொடுக்க மறுத்திருந்த காரணத்தி னால் தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது.

தமது கடமையை நேர்மையுடன் செய்ய விரும்பும் சகல நீதிபதிகளுக்கும் இது ஓர் சிவப்பு எச்சரிக்கை என்பதை, தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்லா மல், சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமைக்குள் முழுநாடும் இப்போது தளள்ப்பட்டிருக்கின்றது.

நீண்ட பல வருடங்களாக நிலவி வரும் அரச பயங்கரவாதம் என்பது, இப்பொழுது புதிய களம் ஒன்றை திறந் திருக்கின்ற நிலைமையில், சட்டத் தின் ஆடசி தொடர்பில் எஞ்சியிருந்த நம்பிக்கைகளும் சிதறத் தொடங்கி யுள்ளன.

எமது மக்களைப் பொறுத்தமட் டில், குருந்தூர் மலை விவகாரத்தில் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் நேர்மையான நீதிபதிக்கு ஆதரவாகவும், அதற்கும் மேலாக, நீதித் துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் பாரிய சவாலுக்கு எதிராகவும் எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிப் படுத்தியேயாக வேண்டும். உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கும் விதத் தில் அது நிச்சயமாக வெளிப்படுத் தப்படும்.

# மலையக ரயில் சேவையில் பாதிப்பு



மலையகப் பாதையில் செல் லும் ரயில் சேவையில் நேற்று இடையூறு ஏற்பட்டது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித் துள்ளது.

பட்டிப்பொல ரயில் நிலையத் துக்கு அருகில் சீரற்ற காலநிலை காரணமாக ரயில் பாதையில் பாரிய மரமொன்று முறிந்து விழுந்தது.

இதையடுத்து ரயில் ஊழி யர்கள் மரத்தை அகற்றி சில மணித்தியாலங்களின் பின்னர் ரயில் போக்குவரத்தைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தனர் என்று ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரி வித்துள்ளது.

உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga


மனவளக்கலை

# sky Yoga

நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்
**sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்**
**(Sky Yoga Foundation Course )**



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
**sky Yoga Center**
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607



நடிகர் திலகம் – நூற்றாண்டு விழா அமைப்புக்குழு, கனடா

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் 'மாற்று நாடக இயக்கம்' | சென்னை 'யா-கார் தியேட்டர்' நாடகக்குழு

Yaa-Kar Theatre

இணைந்து நடத்தும்

## இணையவழிக் கருத்தரங்கம்

'கனடா' மூர்த்தி
செல்வி சி.பா.ஆதிரை நஸ்ரீன், பள்ளி மாணவி, திருப்பத்தூர்
திருமிகு ரஷ்யா தங்கப்பன்
பேராசிரியர் பாலசுகுமார்
திருமிகு 'முக்தா' ரவி, திரைக்குழுமம், சென்னை



திரைக்கலைஞர் ம.நாசர்
திருமிகு 'யா-கார்' சு.வேலாயுதம், நாடகவியலாளர், சென்னை
முனைவர் கி.பார்த்திபராஜா, பேராசிரியர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்

அனைவரும் வருக!



நடிகர் திலகம்
**சிவாஜிகணேசன்** அவர்களின்
**95 வது பிறந்த நாள் விழா**

அக்டோபர் 1, 2023 (ஞாயிற்றுக்கிழமை)

இந்திய நேரம் மாலை 6:00 மணி முதல் 8:00 மணி வரை

zoom Meeting ID : 842 5407 2088 Passcode : 304876



# கபடியில் இரண்டாவது வருடமாக சம்பியனான கிளிநொச்சி மாணவிகளைக் கௌரவித்த வர்த்தகர்

தேசிய மட்டப் பாடசாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி யில் சாதித்த கிளிநொச்சி மாவட்ட சிவ நகர் அரசினர் தமிழ் கலவன் பாட சாலை மாணவிகள் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் கபடி அணியினர் இம்முறை நடைபெற்ற தேசிய ரீதியிலான கபடிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனையை நிலை நாட்டினர்.

இரண்டாவது வருடமாகவும் தொடர்ந்து முதல் நிலையை இப்பாடசாலை தக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச் சாதனையை கௌரவிக்கு முகமாக நேற்றுமுன்தினம் (28) கிளி நொச்சி மாவட்டத்தில் மிகவும் பிரபல்ய மான ஸ்ரீராம் நகைக் கடையின் உரிமை யாளர், சாதனை புரிந்த அனைத்து வீராங்கனைகளையும் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கடையின் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# மாகாண மட்ட விளையாட்டில் சாதித்தவர்களுக்கு கௌரவம்

**(எஸ்.அஷ்ரப்கான்)**

மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில தங்கம் வென்ற ஒலுவில் அல்–ஹம்றா மாணவர்களை ஊர்கூடி வாழ்த்திக் கௌரவித்துள்ளது.

மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற ஒலுவில் அல்–ஹம்றா மாணவர்கள் இருவருக்கே இவ்வாறு பாராட்டு விழா எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அக்கரைப்பற்று கல்வி வலைய உடற் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் எஸ்.எம்.ஜெமீல், கௌரவ அதிதியாக அக்கரைப்பற்று கல்வி வலைய உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் எச்.எம். ஹம்மாத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கந்தளாயில் நடைபெற்று முடிந்த பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் இல் அல்–ஹம்றா மகா வித்தியாலய மாணவர்களான எம்.ஏ.ஆர். ஹாபீஸ் ரய்ஹான் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றார். அதேபோல மற்றொரு மாணவியான ஹிதாயத்துள்ளாஹ் லுபினா ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென்று சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இம் மாணவர்களையும், பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்களான ஏ.எம்.எம். கியாஸ், ஆர்.நௌசாத் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் சஹி மற்றும் அதிபர் அஷ்ஷேய்க் யு.கே. அப்துர் ரஹீம், பிரதி அதிபர் எம்.ஏ. கமறுன்நிஸா, இம்மாணவர்களை ஊக்கப்படுத்திய இணைப்பாட விதானத்துக்குப் பொறுப்பான உதவி அதிபர் எம்.எச்.எம்.நஸீம், உதவி அதிபர் ஏ.ஜே.எம். றினீஸ் ஆசிரியர்கள் ஆகியோரும் இப்பாராட்டு நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 30.09.2023




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வழிப் பிரச்சினைக்கு ஆளாகலாம்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும். அது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.09.2023

**தனுசு**

இன்று வளர்ச்சி நோக்கி செய லாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குக ளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளி யிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக் கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.

**கும்பம்**

இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும். அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதி கப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

**மகரம்**

இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளி தில் அடைவீர்கள். உங்களின் உறுதி யான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செய லாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற் கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அத னால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**மீனம்**

சில குடும்ப பிரச்சினை காரண மாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்–துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செய லாற்றலாம். முக்கிய முடிவுகள் எடு–ப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக் காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்பட தீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.



